சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.மு.விவேக் (த/பெ. (லேட்) திரு.வி.முருகன்) – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை**

அரசாணை (2டி) எண்.152

062322

நாள் : 03.10.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, புரட்டாசி – 16

- 9 OCT 2019

படிக்க :-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.32877/நிபி8/1/2019, நாள். 28.06.2019.

-----

**ஆணை :-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதத்தில், தேனி மாவட்டம், பெரியகுளம், அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் சிறப்புநிலை மருந்தாளுநராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.வி.முருகன், என்பவர் 28.01.2002–ல் பணியிடையே மரணமடைந்தார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 27.04.1959 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள். 30.04.2017 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன், திரு.மு.விவேக் என்பவர் தனக்குப் பணிநியமனம் வேண்டி 02.09.2002 அன்று விண்ணபித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 13.04.1981 என்றும், திரு.மு.விவேக் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராக 13.06.2018 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 13.06.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசகை் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை எற்று, திரு.மு.விவேக், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 13.06.2018 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவினை முறையே அவற்றின் அ.சா.எண்.14060/க்யூ1/2019-1, நாள்.20.09.2019 மற்றும் அ.சா.எண்.32117/ஜி2/2019, நாள்.27.09.2019-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்,
அரசு செயலாளர்.

**பெறுநர்**

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
திரு.மு.விவேக், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக).
மாநில கணக்காயர், சென்னை – 600 018.

**நகல்**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்